இளங்கலை தமிழ்

வருடம் : 2018 - 2019 on wards

பருவம் : 6

பாடத்தலைப்பு - முதன்மைத்தாள் - XII

சங்க இலக்கியம் - புறம்

பாடக்குறியீட்டு எண் : 18BTA62C

அலகு : 2

புறநானூறு - பாடல்கள்

தும்பை - 273, 294, 307

வாகை - 26, 31, 170

பாடாண் - 10, 13, 14

கைக்கிளை - 83, 84, 85

பெருந்திணை - 143, 144, 145

தயார் செய்தவர் :

முனைவர். வை. செல்வசுப்பிரமணியன்

தொடர்பு எண் : 9952621715

அலகு : ௨

தும்பை : 273 வது பாடல்

மா வாராதே ; மா வாராதே ; .... உலந்தன்று கொல், அவன் மலைந்த மாவே?

திணை : தும்பை ; துறை : குதிரை மறம்

எருமை வெளியனார் பாடியது

தும்பை : மாலையையோ அல்லது பூவையோ சூடிப் பகைவரோடு போர் புரிதல் தும்பைத் திணையாகும்.

உரை : குதிரை வாராதாயிற்று ; குதிரை வாராதாயிற்று மறவர் அனைவரின் குதிரைகளும் வந்தன. எம் இல்லத்தின் புல்லிய உணவை போலும் குடுமியை உடைய புதல்வனைப் பெற்ற செல்வனாகிய கணவன் ஊர்ந்து செல்லும் குதிரையே வாராதாயிற்று. இரண்டு பெரிய ஆறுகள் ஒன்று கூடும் ஒரு பெரிய சங்கமத்தைக் குறுக்கே நின்று தடுக்கும் பெரிய மரம் அலைப்புண்டு வீழ்வது போல அவனைச் சுமந்து சென்று போர் செய்த குதிரையும் வீழ்ந்து போயிற்றுப் போலும்.

உரை விளக்கம் : குதிரை ஊர்ந்து போருக்குச் சென்றாரில் தன் கொழுநன் மட்டும் வாராமை அறிந்த மனைவி அவன் ஊர்ந்த மா இறந்ததோ என்று ஐயுற்று வருந்துவதாக இப்பாடல் அமைகிறது

தும்பை பாடல் : 294 "வெண்குடை மதியம் மேகம் நிலாத் திகழ்தர, ... நிரை தார் மார்பின் நின் கேள்வனை, பிறரே.

தும்பை : தும்பை மாலையையோ அல்லது பூவையோ சூடிப் பகைவரோடு போர் புரிதல் தும்பைத் திணையாகும்.

உரை : வெண்குடை போல வானத்தில் முழுநிலா ஒளி வீச, படை வீரர்கள் ஒன்று சேர்ந்து பாசறையில் தங்கியிருந்தனர். புதுமையுறச் செம்மை செய்யப் பெற்ற படைக்கருவிகளைக் கொண்டு எமனைப் போன்று கொல்லுதலைச் செய்கின்ற வீரர்கள் அவர்கள் தம்மவர் என்றும் அயலவர் என்றும் அறியாது மயங்கிய போர்க்களத்தில் வேந்தன் புகழையும் உங்கள் புகழையும் தோன்றச் செய்து உங்களின் வாழ்நாள் முறை முடிந்தவர் இவண் வருக என்று கூறி நிரைந் மாலையை அணிந்த நின் கணவன் போர் மேற்கொண்டு ஒரு பக்கத்தே நின்றான்.

நாகப்பாம்பு உமிழ்ந்த மணியை யாரும் அணுகாது நீங்காது போலப் பகைவரும் அவனை நெருங்கவில்லை.

விளக்க உரை : சீறு கொண்டு போர்க்களம் புகுந்த மறவன் ஒருவன் சுறாவினைப் போன்று பகைவரைப் போருக்கு அழைத்ததை இப்பாடல் விளக்குகிறது.

தும்பை

**பாடல் : 307** "ஆசு ஆகு எந்தை யாண்டு உளன் கொல்லோ ... நெஞ்சு அற வீழ்ந்த புரைமையோனே.

திணை - தும்பை ; துறை - களிற்றுடனிலை
வண்ணக்கன் சோருமருங்குமரனார்

பொருள் : பற்றுக்கோடாக விளங்கிய என் தந்தை போன்ற தலைவன், எங்கே உள்ளானோ? குன்று போல விளங்கும் தான் ஊர்ந்து வந்த களிற்றோடு புண்பட்டு அவன், யாருமின்றி அயலான் போலத் தோன்றுவதை அவ்விடத்தே காண்பாயாக.

அவன் வேனிற் காலத்தில் அங்குமிங்கும் சுற்றித் திரிகின்ற, முதுகில் மூன்று வரிகளையுடைய அணிற் பிள்ளையின் வாலைப் போல விளங்கும், காய்தல் உணர்ந்தன்ன உலகம் புல்லின்றி கதன்று வீழ்ந்த முற்றிய ஆவாரையது, தன்னுடைய கிளையின் மணம் வீசுகின்ற நீண்ட தலைமயிரின் திரண்ட கொண்டையை தாங்கும்படி வீழ்ந்து கிடக்கின்றான். பருகுவதற்கு நீரும், உண்பதற்குப் புல்லும் தாராமல் உப்பு வாணிகர் மயக்கமும் இயக்கமும் இல்லாத ஒரு புறத்தே முடம்பட்டமை காரணமாக விட்டு நீங்கிய உயர் வாடாத வலிய காளையினைப் போலக் கிடந்து, அவ்வழி வரும் பகைவருடைய பெருமை பொருந்திய உயிர்களைக் கவருகின்றான்.

அக்காட்சியைக் கண்ட , கொடிய சினம் கொண்ட யானைப் படையையுடைய வேந்தனும் இப்போர்க்களத்தில் உயிர் உய்ந்து பிழைத்ததைவிடச் சிறந்தது வேறொன்றும் இல்லை எனக் கருதினான். தன்னுடைய படைகளை ஒப்படைசெய்து, அவருடன் போருடற்றுவதன் அருமையை உணர்ந்தனன். எதிர்த்து நிற்கும் வன்மையில்லாமையால் குற்றம் உடையவனாய்த் தன் நெஞ்சத்தின் உளக்கம் குற்றிலு நீங்கப் பெற்றனன்.

**வாகை : 26** வது பாடல் "நளி கடல் இரும் குட்டத்து ... ஆற்றார் ஆயினும் ஆண்டு வாழ்வோரே

திணையும் துறையும் அவை. அவனை மாங்குடி கிழார் பாடியது.

துறை விளக்கம்: 'அடுகளம் வேட்ட செழியன்; வேள்வி முற்றிய வேந்தன்' எனச் செழியனின் இயல்பு கூறியதால் அரசவாகையாயிற்று.

உரை: பெரிய கடலின் ஆழமுடைய பரப்பிடத்தில் காற்றால் செலுத்தப்பட்ட மரக்கலம், நீரை விலக்கி முன்னேறும். அது போல, ஆண் யானை போர் மேல் சென்று போர்க்களத்தின் இடத்தை அகலமாக்கியது. அகலமடைந்த அகன்ற இடத்தில், ஒளியையுடைய இலையமைந்த வேல் ஏந்திப் பகை அரசர்கள் வீழுமாறு போர்க்களத்தில் திரிந்தாய். புகழ் பரவுமாறு அவர்தம் முரசுகளைக் கவர்ந்தாய்; பகைவர்தம் முடித்தலைகளை அடுப்புப் போலமைத்து இரத்தமாகிய உலை நீரில், வீரவளையணிந்த தோளைத் துடுப்பாகக் கொண்டு துழாவி உணவு உண்டாக்கினாய்; அப்புண்ணை -வால் போர்க்களத்தில் களவேள்வி செய்யும்படி, கொல்லும் போரையுடைய செழியனே! அமைந்த கல்வி -யுடையவரும் ஐம்புலனும் அடக்கிச் செய்யும் நோன்புகளுடையவரும் நான்கு வேதத்தைக் கொண்டோருமான அந்தணர்கள் உனக்குச் சுற்றம் ஆயினர். அவர்களுடன் நின்னால் வெல்லப் பெற்ற மன்னர்களும் ஏவல் செய்து நிற்க, நினைத்த வேள்வியை முற்றுவித்தாய்; தப்பாத வாளுடைய வேந்தனே! உனக்குப் பகைவராகி எதிர்த்து நிற்க இயலாது போயினும் துறக்கத்தை அடைந்தனர்; எனவே நின் பகைவர் தவம்புரிந்தவர் என்பது உறுதி.

வாகை பாடல்: 31 "சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
... துஞ்சாக் கண்ணே வடபுலத்து அரசே."

திணை: வாகை; துறை: அரசவாகை; மழபுலவஞ்சியும் ஆம்

அவனைக் கோவூர் கிழார் பாடியது.

துறை விளக்கம்: அரசனின் இயல்பு கூறுதல் அரசவாகை, 'நல் இசை வேட்டத்தால் வேல் போர்ப் பாசறையல்லது நீ ஒல்லாய்' என அரசனின் இயல்பு கூறியதால் அரசவாகையாயிற்று.

பகைவர் நாட்டைக் கொள்ளை கொண்டு அவர் நாட்டைப் பாழாக்குதல் மழபுலவஞ்சியாகும்; வடபுலத்து அரசர் நாடு பாழாகும் என அஞ்சுதல் குறித்ததால் மழபுலவஞ்சியுமாம். இத்துறையாயின் திணை வஞ்சி ஆகும்.

உரை (1-11) சிறப்புடைய மரமானால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னாக அமையும் தோற்றம் போல, நின்னால் வெல்லப்பட்டோர்தம் குடை பின்னால் அமைய முன்னே உயர்ந்தோங்கிய நின் குடை; நிறம் பொருந்திய மதியினைப் போல எழுந்து யார்க்கும் அது, தொலைவிலும் விளங்குமாறு திகழும். நல்ல புகழின் வேட்கையால், விரும்பிச் செய்யும் வெல்லும் போரை -யுடைய பாசறையல்லது ஊரின் மாளிகையில் தங்குதல் நீ உடன்படாய்; நின்னுடைய யானைக் கூட்டம், தம் தந்தங்களின் கூரிய முனை மழுங்கப். பகைவரின் காவலரண்மதில் பாயும்; அவ்வாறு மண்டுதல் அல்லது அடங்கியோர; 'போர்' என்றால் புனைந்த வீரக் கழலணிந்த வீரர்கள் விருப்பம் கொள்வர்; மாறாக, "காட்டுப் பகுதிகள் இடைப்பட்ட நாடுகள் வெகுதொலைவின; எனவே செல்ல மாட்டோம்" எனக் கூறார். நின் படையின் தன்மை இத்தன்மையது ஆகும்.

(11-17) "கல்லென்று ஆரவாரிக்கும் விசுளக்களை -யுடைய மகைப்புலத்தின் இருப்பிடங்களில் தங்கியவாய்; பின் நின் சிறைக்கடல் பின்னேகுமாறு மேலைக்கடல் நோக்கிச் செல்வதால் வெண்மையான மேற்பரப்புடைய அலைகள் நின் குதிரைகளின் குளம்புகளை வருத்தும். அவ்வாறு வருந்த பலமுறை பயிற்சிக்கும் வருவாய்" எனத் தருமொழி, மனம் யாண் நடுங்கிகிற துன்பமடைந்த பயமுற்று அரசர்கள் உறங்காத கண்களையுடையர் ஆவர்.

பாடல்: 170 "மரை பிரித்து உண்ட நெல்லிவேலி,

வாகை .... உலைக்கல் அன்ன, வல்லாளன்னே

திணை: வாகை; துறை: வல்லாண் முல்லை; தானை மறமும் ஆம்.

பாட்டாங் கொற்றனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியது.

துறை விளக்கம்: ஒரு வீரனுடைய வீட்டையும் ஊரையும், இயல்பினையும் சொல்லி அவன் ஆண்மைத் தன்மையை நன்மை பெருகச் சொல்லுதல் வல்லாண் முல்லைத் துறையாகும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை "இல்லும் பதியும் இயல்பும் கூறி நல் ஆண்மையை நலமிகுத் தன்று" என்று குறிப்பிடும்

"உலைக்கல் அன்ன வல்லாளன்னே" என்று இப்பாடலில் குறிப்பிட்டுள்ளதால் வல்லாண் முல்லைத் துறையாயிற்று.

போர் செய்தற்கு எதிர்ந்த இருவகைப் படைகளும் தம்முள் பொருது மடியாத வண்ணம் ஒரு வீரன் பகுதாங்கு ஆற்றலின் உயர்ச்சியைச் சொல்லுதல் தானைமறம் எனப்படும்.

உரை: மறையாமல் மிக்கு உண்ணப்பட்ட நெல்லி மரங்களால் ஆகிய வேலியையும், அதன் விதையாகிய பரலுடைய முற்றத்தினையும், அழகிய குடியிருப்புகளை உடையது சீறூர். அவ்வூரில் பகற்பொழுதெல்லாம் (ளியும்) வேட்டையாடித் திரிந்த கல்வி இல்லாத காட்சியையுடைய வில்லாகிய ஏரால் உழுதுண்பாரின் (வேட்டுவரின்) நடுவே, ஒலியெழும் ஓசையுண்டாக இசைத்த பிறப்பினையுடைய புலையன் தன் கை இடப்ப, வலிய அச்சத்தைத் தரும் துடியை முழக்கிக் கொட்டுவான்; அவ்வோசை புலி இருக்கும் மலையில் பேரொலியோடு சென்று ஒலிக்கும்; பகைவீர்! அத்தகைய மலை பொருந்திய நாட்டை உடையவனாகிய சிறிய வேலுடைய மன்னன் அணுகாதிருப்பீராக; அவன் சிறுகண் யானையின் தந்தத்தில் விளைந்த ஒளி திகழும் முத்தத்தை விறலியர்க்குக் கொடுத்தான்; நாரைப் பிழிந்தெடுத்த கள் தெளிவைப் பண் பொருந்திய யாழுடைய பாணர் சுற்றத்திற்கு நுகரக் கொடுத்தான்; இவ்வாறு தன்னிடத்துப் பரிசில் வேண்டி வந்தோர்க்கு மென்மையுடையவனாவான்; ஆனால் பகைவர்க்கு, இரும்பைப் பயன்படுத்துகின்ற வலிய கையையுடைய கொல்லன் உலைக்களத்திலே விளங்கும் உலைக்கல் போலும் வலிய ஆண்மையை உடையவன் ஆவான்.

**பாடாண் : பாடல் : 10**

வழிபடுவோரை வல் அறிதியே! ..... எய்த வந்தனம் யாம்; ஏத்துகம் பலவே.

திணை துறையும் அவை.

சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது.

துறை விளக்கம்: இப்பாடலில் சேட்சென்னியிடம் 'வல் அறிதி; மொழி தேறாய்; தீமை கண்ணின் ஒறுத்தி; தண்டமும் தணிதி' என அவனியல்பு சொல்லியதால் இப்பாட்டும் இயன்மொழி ஆயிற்று

உரை : (1-6) உன்னை வழிபட்டு நிற்போரை நீ விரைவாக அறிவாய்; பிறரைக் குறை கூறுவோர் தம் சொற்களில் உண்மையைத் தெளிவாய். நீ செய்யாதக் கண்டு, ஆராய்ந்து சிதைவு செய்யப்பட்ட தீமையை ஒருவனிடம் கண்ட அளவில் அறநூல்களுக்கு ஏற்ப ஆய்ந்து அதற்குரிய தண்டனையை வழங்குவாய்; அவர் தாம் வந்து நின்னையடைந்து நின்னடி வணங்கி முன் நின்றால், அவர் தீமை புரியும் முன் அவரிடமும் கொண்ட அருளினும் மிகுதியான அருளால் அவருடைய தண்டனையைக் குறைக்கவும் செய்வாய்.

(7-13) அமிழ்தத்தைச் சுவையால் வென்று உன்னை உண்ண அடங்காத, மணம் நிறைந்த தாளிப்பினை -யுடைய உணவினை விரும்பி உண்டவர்க்கு அளவறிந்து அளித்து மகிழும் குற்றமற்ற வாழ்க்கையுடையவர் குலமகளிர்; அம்மகளிரால் போற்றுவதே அன்றி வீரரால் போரிட இயலாது ஒழிந்ததும், இந்திரவில்லை ஒத்த மாலையை உடையதுமான மார்பினையுடையவனே! ஒரு செயலைச் செய்தபின் 'அது தவறு செய்தனம்' என்று இரங்கிக் கூறாத திட்பமுடைய செய்கையும், வெகு தொலைவிலும் விளங்குமாறு அமைந்த புகழையும் உடையவனே! நெய்தலங்கானல் என்னும் ஊரினை உடைய நெடியவனே! இத்தகைய உன்னுடைய பல புகழைக் கூறுவதற்காக யாம் உன்னை வந்தடைந்தோம்.

**பாடல்: 13 பாடாண்**

'இவன் யார்?' என்குவை ஆயின், இவனே...
வசை நீர் வேலி நாடு கிழவோனே

திணை: பாடாண் திணை; துறை: வாழ்த்தியல்
சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி கருவூரிடம் செல்வானைக் கண்டு சேரமான் அந்துவஞ் சேரல் இரும்பொறையோடு வேண்மாடத்து மேல் இருந்து, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம்: மன்னனை வாழ்த்தும் தன்மையில் அமைவது வாழ்த்தியல். இப்பாடலில், 'நோய் இலனாகிப் பெயர்க' என வாழ்த்துவதால் இப்பாடல் வாழ்த்தியல் ஆயிற்று.

உரை: 'இவன் யான்' என்று என்னிடம் வினவுவீராயின்;
(10-13) இவன் தான், வயலில் மயில் உதிர்த்த தோகைகளை உழவர்கள் அரிந்த நெற்கதிர்களுடன்

சோற்றுக் கட்டியும், கொழுத்த மீனும் கள்ளும் கொண்ட
மிகுதியான நீராகிய வெள்ளை உடையதாகவும்
விளங்குகிற நாட்டுக்கு உரிமையுடையவன்.
(1-9) இவன் தான், முயலின் தோலால் செய்த
கேடகத்தில் விளங்கும் புள்ளிகள் சிதையுமாறு ஏவிய
அம்புகள் பாய்ந்ததும் பரந்த அழகுடையதுமான மார்பினை
-யுடையவனாய், பொன்னைப் போல விளங்கி ஆண்யானை
-யின் மீது அமர்ந்தவன்; இவன் அமர்ந்த யானை
கடல் நடுவே செல்லும் மரக்கலம் போலவும் விண்மீன்க
-ளிடையே செல்லும் நிலவினைப் போலவும் விளங்கும்;
அது சூராக்கட்டம் போன்ற வாளுடைய வீரர் சூழத்தான்
வரும் போது தன்னுடைய பாகரும் அறியாதபடி மதங்
கொண்டது; இவன் தீதின்றிப் பெயர்வானாக;

பாடாண் பாடல்: 14 கருங்கண்ண கொல் களிற்றால் .... செருமிகு
சேஎய்! - நின் பாடுநர் கையே
திணை: அது; துறை: இயன்மொழி.
சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் கபிலர்
கைப்பற்றி, மெல்லியவாமால் நும் கை என, கபிலர்
பாடியது.
துறை விளக்கம்: கபிலர் தம் கையின் இயல்பு கூறுவ
போல், அரசன் கையின் வலிய இயல்பினையும் வா
கூறுவதால் இப்பாட்டு இயன்மொழியாயிற்று.
உரை: (1-11) தலைவ, கருங்கண்ணையுடைய கொல்லும்
யானையால் காவலுடைய கடிய மரத்தை முறித்து,
இரும்பால் செய்த அழகிய அங்குசத்தால் அந்த
யானையை முன்பு தீண்டியும் பின் வேண்டுமளவு
நிறுத்துவன, நின் கைகள்; அவை வள்ளத்தில்
குந்தாலியால் இடித்துக் குடியாக அமைந்த நீர் நிலையின்
ஆழம் கருதி, அதனிடம் செல்லாமல் விரையும்
குதிரைகளைத் தடுப்பன; மேலும் அம்பறாத்தூணியை
உடைய இடுகின்றாயத் தேர்மேல் நின்று வில்லின்
வலிய நாணின் விசையால் வடு உண்டாகும்படி
அம்பு செலுத்துவன; பரிசில் வேண்டியோர்க்கும் அரிய
கலன்களை நல்குவன; ஆகவே இறந்தாரைத் தொடும்
நின் கைகள் வன்மையுடையனவாயின.
(16-19) பெண்மறை வருத்தும் மார்பையும்
போரிடுவோர்க்கு நடுக்க முறாத பெரிய நிலம் போன்ற
வலிமையையும் கொண்டவனாய்ப் போரில்
முருகவேளை ஒத்துத் தோன்றுவாய்.

(12 - 16 & 19) பெருமானே உன்னைப் புகழ்வோருடைய கைகள் புலால் மணமுடைய பசிய இறைச்சியைப் நறுமணம் வீசும் புகையை எழுப்பச் செய்த உணவையும் துவையலையும் கறியையும் சோற்றையும் உண்பதன்றி வருந்தும் தொழிலைப் பிறிதொன்றும் அறியா; ஆகவே அவர்தம் கைகள் மென்மையுடையன.

உரை விளக்கம்: சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலரின் கையைப் பற்றிய போது அவர் கை மிக மென்மையதாய் இருந்ததைக் கூறினான்; அதற்கு மறுமொழி கூறவந்த கபிலர் தம் கையின் மென்மையுடன் அரசன் கையின் வன்மையும் கூறினார். இப்பாட்டுள் தம்மோடு தம்மை ஒத்த புலவர் இயல்பும் இணைத்துக் கூறினார்.

**கைக்கிளை: பாடல், 83**

அடிபுனை தொடுகழல், மை அணல் காளைக்கு என்....
இரு பாற்பட்ட இம் மையல் ஊரே.

திணை: கைக்கிளை; துறை: பழிச்சுதல்

அவனைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியது.

திணை விளக்கம்: கைக்கிளை என்பது ஒருதலைக் காமம் ஒருவரிடம் தான் கொண்ட காதலை அவரால் விரும்பப்படாத நிலையிலும் கூறி மகிழ்வதாகும்.

துறை விளக்கம்: இவ்வகையில் பெருநற்கிள்ளியைப் புகழ்ந்து தம் காதலை நக்கண்ணையார் புலப்படுத்தியது; (பழிச்சுதல் - புகழ்தல்)

உரை: காலில் புனைந்த செறிந்த வீரக்கழலுடையவன்; மை போன்ற கரிய தாடியையுடையவன். அத்தலைவன் பொருட்டாக என் வளையல்கள் கழன்று போகின்றன. அதனால் நான் தாயை எண்ணி அஞ்சுவேன். பகையை வென்றும் அவனுடைய தோளைத் தழுவுதற்கு எண்ணினேன்; அவைக் களத்தே உள்ளாரை எண்ணி நாணுவேன். எந்நாளும் ஒரு தன்மைத்தாய் இல்லாமல் இரு தன்மைத்தாய் மயக்கத்தையுடைய இவ்வூர் என்னைப் போல மிக்க நடுக்கமுறுவதாக.

உரை விளக்கம்: தாயன்றோ, அவனை அடைய இடையூறாக்கும் வளை கழன்று போவதற்கு அஞ்ச வேண்டாம். அவைக்களமின்றோ அவனைக் கூடுதற்கு அஞ்ச வேண்டாம். இவ்வாறு பசலையைப் புலப்படுத்தவும் இயலாமல் கூடும். விருப்பத்தைக் கூறவும்

இயல்பானவனாய் இரண்டும் உடன் இருப்பதால் இருபாற்பட்
என்றனள். தான் துன்பத்தை உள் தருவதாய்க்
கருதியமையால் இருபாற்பட்ட இம்மையில் உள்
என்றான்.

## கைக்கிளை

**பாடல் : 84** என்னை, புற்கை உண்டும் பெருந் தோளனே;
.... உம்மனார் வேறும் துறையனன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம்: கைக்கிளைக் காதலாய்ப் பெருநற்கிள்ளியை விரும்பும் நக்கண்ணையார், அவனைப் புகழ்ந்து தன் காதலைப் புலப்படுத்தியது.

உரை: என் தலைவன் நாடிழந்து, வறுமையால் கூழ் உண்டான். ஆயினும் பகைவரும் அஞ்சும் பெருந் தோளை -யுடையவன்; யாம் அவனுடைய சிறைப்புறத்து இருந்து அவனைக் கண்டிருந்த போதும் அவனை மெய்யுறத் தழுவாமையால் பொன் போலும் நிறத்தை அடைந்தனம். போரை ஏற்று என் தலைவன் போர்க்களம் புகுவான்; கல்லெனும் ஆரவாரத்துடன் விளங்கும் பெரிய ஊரில் போரின் பொருட்டு எடுத்த விழாவினையுடைய இடத்தில், தத்தம் வலிமையைப் பேசி இன்புற்று வீரர்கள் செல்வர். அத்தகைய வீரர்க்கு, களம் புகும் பெருநற்கிள்ளி, உப்பு விற்கும் உமணருக்கு சேறு மன்னம் நிறைந்த துறை அச்சம் தருவது போல் விளங்குவான்.

கைக்கிளை **பாடல் 85** "என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்
... யான் கண்டனன், அவன் ஆடு ஆகுதலே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம்: பெருநற்கிள்ளியை விரும்பிய நக்கண் -ணையார் கைக்கிளையாய்ப் புகழ்ந்து பாடியது.

உரை: என் தலைவனாகிய பெருநற்கிள்ளிக்கு ஊர் இஃதன்று, நாடும் இஃதன்று. எனவே அவனுக்கு இயல்பான வெற்றியை 'வெற்றி' என்று ஏற்றுக் கூறுவர் ஒரு திறத்தார். 'வெற்றியன்று' என்று மறுத்துக் கூறுவர் ஒரு திறத்தார். இவ்வாறு இருவகையாகவும் பலர் கூறிய நன்மொழி நல்லவாய் இருந்தன.

அழகிய நிலம்பொலிக்க ஓங்கிச் சென்ற எக்குடைய இல்லத்தில் இருளினைப் போலும் அழகை உடைய பனைமரத்தைப் பொருந்தி நின்று அவனுடைய வெற்றியை யான் கண்டேன்.

பெருந்திணை: பாடல்: 143

'மலை வான் கொள்க!' என, உயர்பலி தூஉய், .... குழல் இனைவது போல் அழுதனள், பெரிதே!

திணை: பெருந்திணை; துறை: குறுங்கலி; தாபத நிலையும் ஆகும்.

பேகனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக வையாவிக் கோப்பெரும் பேகனைக் கபிலர் பாடியது.

திணை விளக்கம்: பெருந்திணையாவது பொருந்தாக் காமம்.

துறை விளக்கம்: வேறு மகளிரை விரும்பிய ஒருவனுடைய காதல் கெடும்படி சொல்லுதல் குறுங்கலியாகும். ஒருவனால் துறக்கப்பட்ட அவன் மனைவியை அவனோடு சேர்க்கும் பொருட்டு, 'நீ இவள்பால் அருள் செய்தல் வேண்டுமென வேண்டுதல்' கணவனைப் பிரிந்த மனைவியின் நிலையைக் கூறியமையின் தாபதநிலையும் ஆயிற்று. பேகனால் துறக்கப்பட்ட கண்ணகிக்கு அருள்புரிய வேண்டும் என்று புலவர் இரந்து வேண்டுவதால் குறுங்கலி ஆயிற்று. "குழல் இனைவது போல் அழுதனள்" என்று குறிப்பிடப்பட்டதால் இப்பாடல் குறுங்கலித்துறை ஆயிற்று.

உரை: தெய்வத்தைப் போற்றும் குறமக்கள், மழையற்ற காலத்து, மலையை மழை வந்து சூழ்க என்று, பலியைத் தூவி வேண்ட; மிகுதியான மழை பெய்தது; மழை மிகுதியாகப் பெய்ததால் அதனை நிறுத்த வேண்டி, முகில் (மேகம்) மேலே போவதாக என்று வேண்ட, மழையும் இடம் மாறி பெய்தது. அதனால் உவகை எய்திய குறமக்களின் புனத்தில் விளைந்த தினையை உண்ணுதற்கு இடமான நாட்டை உடையவனே! சினத்தினால் செய்யும் வெல்போரையும், கைவண்மையால் கொடுக்கும் கொடையையும் விரைந்த குதிரைகளையும் உடைய பேகனே! அருளத்தக்க அவள்தான் யாரோ? நேற்று சுரத்தில் நடந்து வருந்திய என் சுற்றம் பசியால் வாட, கதழ்பு அறைந்த முரசு போல ஒலிக்கும் அருவியையுடைய உயர்ந்த மலைச் சாரலில் உள்ள சிற்றூராகிய அவ்விடத்து வந்து சேர்ந்தோம். அவ்வூரில் ஒரு வீட்டின் வாயிற்கண் தோன்றி வாழ்த்தி நின்று நின்னையும், நின் மலையையும் பாடினோம்; அப்பொழுது இன்னாதாகச் சொரிந்த கண்ணீரை நிறுத்தமாட்டாதவளாய் முலையிடம் நனையப் பொருமி, குழல் இரங்கி ஒலிப்பது போல ஒருத்தி மிகவும் அழுதாள்.

பாடல்: 144 பெருந்திணை:

அருளாய் ஆகலோ கொடிதே; இருள் வர ... முல்லை வேலி நல்லூரானே.

திணை: பெருந்திணை; துறை: குறுங்கலி; தபுதார நிலையும் ஆம்.

வையாவிக் கோப்பெரும் பேகனைக் கண்ணகி காரணமாகப் பரணர் பாடியது.

துறை விளக்கம்: "அருளாய் ஆகலோ கொடிதே... நல்லூரானே" என்று பேகன் செயலைச் சுட்டி அருள் செய்யும்படி இரந்து கூறியதால் குறுங்கலியாயிற்று. இப்பாடல் கண்ணகி காரணமாக வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடிய கைக்கிளை வகைப் பாடாண் பாட்டு.

உரை: பேக! மாலைக் காலம் வரச் சிறிய யாழில் இரங்கற் பண்ணாகிய செவ்வழி என்னும் பண்ணை இசைத்து, மலையை ஏற்றுக் கொண்ட நின் காட்டைப் பாடினேம். அது கேட்டு, நீல நிற நெய்தல் போன்று பொலிந்த மையுண்ட கண்கள் கலங்கிச் சொரிந்த கண்ணீர் துளிகள் பூண் அணிந்த மார்பை நனைக்க, ஒருத்தி வருந்தி அழுதனள்; யாம் அவளை வணங்கி, 'இளையோய்! எம் முறைய் நட்பை விரும்புவோருக்கு நீ உறவு உடையையோ? எனக் கேட்டனம்; அவள் காந்தள் மொட்டு போலும் விரலால் தன் கண்ணீரைத் துடைத்து, யாம் அவனுடைய உறவினரேம் அல்லேம்; நீ இப்பொழுது கேட்பாயாக; 'எம்மை ஒப்பாள் ஒருத்தியின் அழகைக் காதலித்து, விளங்கிய புகழுடைய பேகன், ஒலியென முழங்கும் தேருடன் முல்லை வேலி பொருந்திய நல்லூருக்கு இந்நாளும் சென்று வருவான் என்று பலரும் சொல்லுவர்' எனக் கூறினாள். அத்தன்மையானுக்கு நீ அருள் செய்யாதிருத்தல் கொடிது ஆகும்.

பெருந்திணை பாடல்: 145 'மடத் தகை மா மயில் பனிக்கும்' என்று அருளி ... இன்னாது உறைவி அரும் படர் களைமே!

திணை: பெருந்திணை: துறை: குறுங்கலி; தபுதார நிலையும் ஆம்.

வையாவிக் கோப்பெரும் பேகனைக் கண்ணகி காரணமாகப் பரணர் பாடியது.

துறை விளக்கம்: "அறம் செய்தீமோ அருள் வெய்யோய்! என, இஃது யாம் இரந்த பரிசில், ... இன்னாது உறைவி அரும்படர் களைமே" என்று அருள் செய்யும்படி இரந்து கூறியதால் குறுங்கலியாயிற்று. பேகனைப் பிரிந்து வருந்தும் கண்ணகி நிலையை எடுத்துரைத்தமையால் தாபத நிலையும் ஆயிற்று.

மெல்லிய தகைமை பொருந்திய கரிய மயில் குளிரால்
நடுங்குமென்று அருள் செய்து போர்வை கொடுத்த,
அழியாத நற்புகழினையும், மதமுடைய யானையையும்,
மணம் செருக்கிய குதிரையையும் உடைய பேக!
யாங்கள் பசித்தும் வந்தோம் இல்லை; எம்மால்
புரக்கப்படும் (பாதுகாக்கப்படும்) சுற்றமும் எம்பால்
உடையேம் இல்லை; களாம்பழம் போன்ற கரிய
கோடுடைய சிறிய யாழை, இசை இன்பத்தை விரும்பி
உறைவார் அவ்விசையின்பத்தால் தலையசைத்துக்
கொண்டாடும்படி வாசிப்போம்; அருள் வெய்யோய்!
அறத்தைச் செய்வாயாக; இன்று இரவே இனமாகிய
மணியையுடைய உயர்ந்த தேரேறிச் சென்று,
காண்பதற்கு இன்னாததாக உறைகின்றவள்,
பொறுத்தற்கரிய நின் நினைவால் உண்டாகிய
மனைவியின் நோயைத் தீர்ப்பாயாக; இதுவே யாம்
நின்னிடத்து இரந்து வேண்டும் பரிசிலாகும்.

## பகுதி - அ

1. தும்பைத் திணை விளக்குக.
2. தானை மறம் என்றால் என்ன?
3. அரசவாகை குறிப்பு தருக.
4. மகட்பாற் காஞ்சி குறிப்பு தருக
5. வல்லாண் முல்லை விளக்குக
6. பாடாண் திணை என்றால் என்ன?
7. இயன்மொழி - குறிப்பு தருக
8. கைக்கிளை என்பதன் பொருள் யாது?
9. கு. பெருந்திணை என்பதன் பொருள் யாது?
10. வாழ்த்தியல் குறிப்பு வரைக.

## பகுதி - ஆ.

1. எருமை வெளியனார் "மா வாராதே; மா வாராதே" என்ற பாடலில் கொழுநன் வாராதது கண்டு வருந்திய மனைவியின் மனநிலையை விளக்கும் பாங்கினைக் குறிப்பிடுக
2. பெருந்தலைச் சாத்தனார் பாடலில் மறவன் பகைவரைப் போருக்கு அழைக்கும் திறன் எவ்வாறு வெளிப்படுகின்றது?
3. களிற்றுடனிலை என்பதன் பொருள் யாது? களிற்றினை எறிந்து வீழ்ந்து கிடக்கும் ஒரு வீரனின் ஆண்மை வண்ணக்கன் சோருமருங்குமரனால் எங்ஙனம் உணர்த்தப்படுகிறது?
4. நளிகடல் இரும் குட்டத்து என்னும் வாகைத் திணைப் பாடலில் அதிகனாம் வேட்ட செழியனின் இயல்புகளை மாங்குடிகிழார் எங்ஙனம் பாடுகின்றார்?
5. அரசனின் இயல்புகளை கோவூர் கிழார் சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் என்ற வாகைத் திணைப் பாடலில் சிறப்பிக்கும் தன்மை எவ்வாறு உள்ளது?
6. பிட்டங் கொற்றனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் 'மரை பிரித்து உண்ட நெல்லி வேலி' என்ற காஞ்சித் திணைப் பாடலில் எங்ஙனம் புகழ்கின்றார்?
7. சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை ஊன் பொதி பசுங்குடையார் 'வழிபடுவோரை வல் அறிதியே' என்ற பாடாண் திணைப்பாடலின் சிறப்பும் நயத்தினைக் குறிப்பிடுக.

8. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய இவன் யார்? என்குவை ஆயின்? இவனே என்னும் பாடாண் திணைப் பாடலின் கருத்தினை விளக்குக

## பகுதி – இ

1. சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனை பாடாண் திணைப் பாடலில் கபிலர் எவ்வாறு புகழ்கின்றார்?
2. பெருநற்கிள்ளியைப் புகழ்ந்து தம் காதலை நக்கண்ணையார் கைக்கிளைப் பாடல்களில் வெளிப்படுத்தும் பாங்கினை ஆய்க.
3. பெருந்திணைப் பாடல்களில் வையாவிக் கோப்பெரும் பேகனின் சிறப்புகள் கபிலரால் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?